IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.555/2013
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.25 PM.

பி.வா.சா. 1 சாட்சி மகாலிங்கம் த.பெ.சின்னகருப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 01.09.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கில் 3 இலக்க சொத்துக்கள் உள்ளது என்றால் தெரியாது. இவ்வழக்கில் இறந்தபோன 3ம் பிரதிவாதியின் கணவராவேன் மற்றும் 5ம் பிரதிவாதி என்றால் சரிதான். 6 முதல் 12 பிரதிவாதிகள் என்னுடைய மக்கள் என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனது பெயரில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது பூர்வீகம் மேலஉப்பிலிகுண்டு என்றால் சரிதான். நான் திருமணம் செய்த ஊர்தான் கூடக்கோவில் என்றால் சரிதான். மேலஉப்பிலிகுண்டு கிராமத்தில் எனக்கு பூர்வீக சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் 3ம் பிரதிவாதி எந்த வருடம் திருமணம் செய்தேன் என்றால் 1974 ஆகும். எனது மனைவி எந்த ஊர் என்றால் கூடக்கோவில் ஆகும்.

3. எனது மாமனாரின் பெயர் என்ன என்றால் முத்தையாதேவர் ஆகும். மாமனாருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 8 பெண் பிள்ளைகள், 1 ஆண் பிள்ளை ஆகும். எனது மனைவி அதில் எத்தனையாவது பிள்ளை என்றால் மூத்த பிள்ளை ஆகும். திருமணமாகி மேலஉப்பிலிக்குண்டில் தொடர்ந்து வசித்து வந்தேனா என்றால் இல்லை. கூடக்கோவில் சென்றுவிட்டேன்.

4. வாதிகளின் தகப்பனார் குருசாமிதேவர் மற்றும் அவருடன் பிறந்தவர்களை பற்றி நன்கு தெரியும் என்றால் சரிதான். குருசாமியுடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 ஆண் பிள்ளைகள் மற்றும் 1 பெண் பிள்ளை என்றால் சரிதான். மேற்படி 4 பிள்ளைகள் யார் என்றால் அழகுமலை, பால்பாண்டி, மகாலிங்கள், வாதிகளின் தகப்பனார் குருசாமி ஆகியோர்கள் ஆகும்.

5. 1வது இலக்க சொத்தின் சர்வே எண். 140/5 ல் ஆதியில் 96 செண்டு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் நல்லதேவர் மகன் அழகுமலைக்கு 33 செண்டு பாத்தியமா என்றால் 41 செண்டு பாத்தியம். 41 செண்டு அழகுமலைக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

6. அழகுமலை உயிருடன் இருந்த காலத்தில் அவரது சொத்துக்களை என்ன செய்தார் என்றும் யாருக்கு விற்பனை செய்தார் என்றும் தெரியுமா என்றால் தெரியும். பால்பாண்டிக்கு அழகுமலை தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 16 செண்டை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் கொடுக்கவில்லை. மேற்படி 16 செண்டை

கிரையம் பெற்ற பால்பாண்டி வாதிகளின் தாயார் செல்லம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் தெரியாது.

7. மீதமுள்ள 17 சென்டை அழகுமலை வாதிகளின் தாயார் செல்லம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார். ஆனால் அது பொய்யாகும். அழகுமலை எழுதிகொடுத்த 2 கிரைய பத்திரங்களும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

8. நான் இவ்வழக்கில் 1, 2 இலக்க சொத்துக்களை பொறுத்துதான் எதிர்வாதம் செய்கிறேன் என்றாலும் 3 வது இலக்க சொத்தை பொறுத்து எந்த எதிர்வாதம் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா 2வது இலக்க சொத்து வாதிகளின் தகப்பனார் குருசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 3 வது இலக்க சொத்து குருசாமி, பால்பாண்டி, அழகுமலை ஆகியோர்களுக்கு ஆரம்பத்தில் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். 3வது இலக்க சொத்து சர்வே எண்ணில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணம் 56 செண்டு என்றால் சரிதான். 1990 ல் அழகுமலை என்பவர் உடன் பிறந்த தம்பி மகாலிங்கத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது.

9. மேற்படி அழகுமலையிடம் கிரையம் வாங்கிய மகாலிங்கத்தின் மேற்படி சொத்தையும் மகாலிங்கத்தின் பங்கு சொத்தையும் சேர்த்து மகாலிங்கத்திடம் பால்பாண்டி கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரிதான். ஆனால், அழகுமலையின் பங்கை மகாலிங்கம் வாங்கவில்லை. பால்பாண்டி என்பவர் அவர் கிரையம் பெற்ற சொத்தையும், அவரது பாக

சொத்தையும் 1ம் வாதி குருநாதனுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.

10. 3வது இலக்க சொத்தை பால்பாண்டியிடமிருந்து 1ம் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அழகுமலையின் மனைவி பெயர் என்ன என்றால் அழகம்மாள் ஆகும். அழகுமலைக்கு மொத்தம் எத்தனை மனைவிகள் என்றால் ஒரு மனைவிதான். அழகம்மாள் என்பவர் அழகுமலையுடன் எத்தனை வருடங்கள் சேர்த்து வாழ்ந்தார் என்றால் 4 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தார். மேற்படி நபர்களுக்கு பிறந்தவர்தான் 2ம் பிரதிவாதி ஆகும்.

11. அழகம்மாள் என்பவர் பாண்டி என்பவரை 2வது திருமணம் செய்து அவர்மூலம் 2 குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். பாண்டி என்பவர் அரசப்பட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். அரசப்பட்டி கிராமத்தில்தான் அழகம்மாளுக்கும் பாண்டிக்கும் ஒரு மகன் மற்றும் ஒரு மகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். அழகுமலை தனது மனைவி தன்னைவிட்டு பிரிந்து சென்றபோது வேறு பெண்னை திருமணம் செய்தாரா என்றால் செய்யவில்லை.

12. அழகுமலை 20.01.1984ம் தேதியில் 1ம் பிரதிவாதியான தனது மனைவிக்கு ஒரு செட்டில்மெண்டு எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அழகுமலை உயிருடன் இருந்தகாலத்தில் அவர் சொத்தை அவர்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்டு ஆவணம் 2ம் பிரதிவாதி பிறப்பதற்கு முன்னதாக எழுதிகொடுத்தாரா அல்லது பின்னதாக எழுதிகொடுத்தாரா என்றால் தெரியாது. அழகம்மாள் அழகுமலையைவிட்டு பிரிந்து செல்லும்போது 2ம்

பிரதிவாதியான கை குழந்தையையும் அதன்னுடன் அழைத்து சென்றுவிட்டார் என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 01.00 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.22 10:03:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.